# கிருபையுள்ள வார்த்தை

# KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


Vol - 16 | February பிப்ரவரி | 2016

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் Betty Choate    ஆசிரியர் பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| விசுவாசம் | 3 |
| பரிபூரண ஜீவன் | 7 |
| தேவன் உலகத்தை... | 9 |
| நாம் முற்றிலும் வெற்றி... | 11 |
| சிறுவர் பகுதி | 15 |



*In memory of* **J.C. CHOATE**

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா.** M.S. (I.T.& M.), M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்.** M.Sc., D.D.,
**C. சியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
**R. ஆன்டனி ராஜா.** D.Th.,
சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.


## கிருபையுள்ள வார்த்தை
## TV நிகழ்ச்சிகள்

வாசகர்கள் கவனத்திற்கு...

**புதுயுகம் T.V. யில்**

செவ்வாய் காலை - 6.15 மணிக்கு
கிருபையுள்ள வார்த்தை
நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.

**தமிழன் T.V. யில்**


**ஞாயிறு** காலை 6-45 மணி


பாருங்கள் ! பயன் அடையுங்கள் !


செய்தியாளர்கள்:

போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)





**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:
**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**
P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

**விசுவாசத்தை விருத்தியாக்கும் விண்ணவரின் வார்த்தை**

World Literature Publication
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.85**

ஆசிரியர் உரை

# விசுவாசம்



P.C. பிலேமோன் ராஜா
ஆசிரியர்

அன்பார்ந்த கிருபையுள்ள வார்த்தை வாசகர்களே ! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

கிறிஸ்தவத்தின் அடிப்படையான காரியங்களில் ஒன்று, 'விசுவாசம்'. இந்த விசுவாசம் என்பது கிறிஸ்தவத்தின் ஆணிவேரைப் போன்றது. ஒரு தனி மனிதனுக்கும் தேவனுக்கும் உள்ள உறவினை பெலப்படுத்துவது மட்டுமல்லாமல், அந்த நபரை தேவனிடம் சேர்க்கும் பாலமாகவும் விசுவாசம் உள்ளது.

ஆபேல், நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது, தானியேல் போன்ற பலர் தேவனிடத்தில் கொண்டிருந்த உறுதியான **விசுவாசத்தினால்,** மிகப்பெரிய காரியங்களை செய்ததை நாம் வேதாகமம் முழுவதும் படிக்கலாம்.

அன்பு, விசுவாசம், பரிசுத்தம் என்பவைகள் வேதாகமத்தில் முக்கனி போன்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இவ்வளவு மேன்மையான விசுவாசத்தினைப் பற்றி நாம் இந்த மாதம் தியானம் செய்வோம்.




### 1. விசுவாசம் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது...

''விசுவாசம்'' என்பது அநேக வேளைகளில் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது. அதைப் பற்றி வித்தியாசப்பட்ட, முரண்பாடான கருத்து உலாவுவதால் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது.

எந்த ஒரு தவறான புரிந்துக்கொள்ளுதலும் சரியான விளைவுகளை ஏற்படுத்த முடியாது. அது சில நேரங்களில் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகி விடும். அற்புதம் செய்து, பிசாசுகளை துரத்தி, தீர்க்கத்தரிசனம் பேசுகின்றவர்கள் இப்படிப்பட்ட செயல்களை விட பரலோக பிதாவின் சித்தம் செய்வது மிக முக்கியம் என்பதை புரிந்துக்கொள்ளாமல் போனபடியினால், ஆண்டவர் இயேசு அவர்களுக்கு மிகப்பெரிய எச்சரிக்கை செய்தார். **மத் 7:21-23** "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே ! கர்த்தாவே ! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே ! கர்த்தாவே ! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா ? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்". மற்றும் இதே போன்ற தவறான புரிந்துக்கொள்ளுதல் கொண்ட வேதபாரகர், பரிசேயர், சதுசேயர், என்பவர்களும் ஆண்டவர் இயேசுவினால் அநேக முறை கடிந்துக் கொள்ளப்பட்டதையும் (மத்தேயு 23) நாம் வாசிக்க முடியும்.

தவறான புரிந்துக்கொள்ளுதல் நமக்குள் தப்பான எண்ணத்தை விதைத்து, தவறான முடிவுகளை நோக்கி தவறாக வழிநடத்திவிடும். **மத் 22:29,30** "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும்,

**தேவனை முழு இருதயத்தோடும் விசுவாசிப்பதே , அவருடைய பிரியத்தை பெற எளிமையான வழி ! (எபி 11:6)**

தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்".

சிலர், நம் இருதயங்களிலும், சிந்தனைகளிலும் நேரடியாகவே பரிசுத்த ஆவியினால் விசுவாசம் உண்டாக்கப்படுவதாக போதிக்கின்றனர். வேறு சிலர் பைபிளின் மூலம் கடவுள் நம் இருதயங்களில் விசுவாசத்தை தோற்றுவிக்கிறார், அல்லது உண்டாக்க பயன்படுத்துகிறார் என்று கூறுகின்றனர்.

நிச்சயமாகவே, இருவேறு கருத்துக்களுமே சரியாக இருக்க முடியாது. இந்த "விசுவாசம்" பற்றிய எந்த வகை கேள்விகளுக்கும் பைபிள் மட்டுமே சரியாக நமக்கு போதிக்க முடியும். விசுவாசம் என்பது பக்தி சம்பந்தப்பட்டது; எனவே, பைபிள் மட்டுமே நமக்கு சரியாக வழிகாட்ட முடியும்.

## 2. விசுவாசம் விளக்கப்படுகிறது...

விசுவாசம் பற்றி வேதாகமம் போதுமான மற்றும் தெளிவான விளக்கத்தை நமக்கு தருகிறது. பரிசுத்த ஆவியின் உதவியுடன் நாம் அதை நேர்மையாக புரிந்துகொள்ள முடியும்.

**எபி 11:1** "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது".



விசுவாசம் என்பது, எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி மற்றும் கண்ணுக்கு புலப்படாதவைகளை பற்றிய ஐயமற்ற நிலையாக இருக்கிறது.

நாம் நம்புகிறவற்றின் மீது கொண்டுள்ள உறுதிதான் விசுவாசம். நம் கண்களால் பார்க்காவிட்டாலும் கூட, உண்மையான ஒன்றை நம்புவதுதான் விசுவாசமாகும்.

**மத்தேயு 16:1—4** "பரிசேயரும் சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து: வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக : ...இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளம் தேடுகிறார்கள்; யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை..."

விசுவாசம் என்பது அடையாளத்தையும், ஆதாரத்தையும் தேடுவது அல்ல; அப்படிபட்டவர்களை இயேசு கடிந்துக்கொண்டார். ஏனெனில் விசுவாசம் என்பதே ஒருவருடைய வாழ்வில் மிகப்பெரிய ஆதாரமாகவும், அவரை உலகிற்கு அடையாளமாகவும் மாற்றுகிறதாயிருக்கிறது **(ரோமர் 4:11,12).**

எபிரேயர் 11ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட, மேகம் போன்ற திரளான சாட்சியாளர்கள் எல்லாம், "விசுவாசத்தினாலே" அடையாளமாக (முன்மாதிரியாக) இருக்கிறார்கள். ஆயினும், தேவன் நம்மை கண்மூடித்தனமாக அவரை விசுவாசிக்கும்படி தூண்டாமல், அவருடைய வார்த்தையினை ஆதாரமாக கொண்டு நம்மை விசுவாசிக்கும்படி அழைக்கிறார் **(ரோ 10:17; மத் 4:4).** நூற்றுக்கதிபதியிடம் காணப்பட்ட இப்படிப்பட்ட விசுவாசம் ஆண்டவர் இயேசுவை பிரமிக்க செய்தது, மற்றும் அவரை மகிழ்ச்சியடைய செய்தது **(மத் 8:8,10).**

## 3. நாம் விசுவாசம் பற்றி சரியாக புரிந்திருக்க வேண்டும்

அப்படியானால் நம் இருதயங்களில் விசுவாசம் எப்படி உருவாக்கப்படுகிறது? விதைக்கப்படுகிற விதையின்

**விசுவாசத்தின் ஆரம்பமும் முடிவும் கிறிஸ்துவே ! (எபி 12:1)**

மூலம். அந்த விதை வேத வசனமே! **லூக்கா 8:12** ''வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்...

அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்ட வசனங்களின் மூலம் விசுவாசம் உண்டாக வேண்டும். **யோவான் 17:20** "நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்".




நற்செய்தியை கேட்பதினால் **(I கொரி 15:1-4),** வேதவாக்கியங்களை ஆராய்வதினால் **(அப் 10:11,12),** வசனத்தை கேட்பதினால் **(ரோமர் 10:13-17)** விசுவாசம் வருகிறது.

விசுவாசத்தைப் பற்றிய சரியான அல்லது நேர்மறையான புரிந்துக்கொள்ளுதல் நமக்கு அவசியம். ஏனெனில் அன்பில்லாதவரால் தேவனை அறிய முடியாது **(Iயோ 4:8)**, பரிசுத்தமில்லாதவரால் தேவனை தரிசிக்க முடியாது **(எபி 12:14),** ஆனால் விசுவாசமில்லாமல் ஒருவர் அன்பாகவும், பரிசுத்தமாகவும் **(எபி 11:22,24,25)** இருக்கவே முடியாது. ஆகையால் நாம் நிச்சயமாக கர்த்தருடைய வார்த்தையின்படி **(ரோமர் 10:17)** விசுவாசத்தை சரியாக புரிந்துகொள்ள வேண்டும்.

### 4. விசுவாசம் என்பது முக்கியமான ஒன்று...

**எபி 11:6** "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.

மிக மிக முக்கியமான கருத்து இது. விசுவாசம் இல்லாமல் எவரொருவரும் தேவனுக்கு பிரியமாயிருக்க முடியாது! தேவனிடத்தில் வருகிறவர் உண்மையாகவே தேவன் இருக்கிறார் என நம்பிக்கை கொள்கிறார்; அதோடு தம்மை தேடுகிறவர்களுக்குப் பலன் கொடுப்பார் என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதாவது நம்பிக்கையினாலன்றி யாரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க முடியாது. ஏனெனில் கடவுளை அணுகிச் செல்வோர், அவர் இருக்கிறார் என்பதையும், அவரைத் தேடிச் செல்வோருக்குத் தக்க கைமாறு தருகிறார் என்றும் நம்பிக்கைக் கொள்ளவேண்டும்.




**வெளி 21:8** 'பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்". விசுவாசம் நம்மை தேவனுக்கு நேராக பரலோகத்தை நோக்கி வழிநடத்துகிறது; அவிசுவாசம் என்பதோ நம்மை தேவனுக்கு எதிராக நரகத்தை நோக்கி வழி நடத்துகிறது.

**யோவான் 20:30-31** "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாமாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது".

### 5. மனித இருதயங்களில் விசுவாசத்தை உண்டாக்குவது எப்படி?

உண்டாக்குவது என்றால், எழுதப்பட்ட வேதவார்த்தைகளின் மூலமாக மட்டும் ஒருவரில் விசுவாசத்தை உண்டாக்க முடியும்.

**தேவன் மேல் நாம் வைக்கும் விசுவாசம், நமது காரியங்களில் அவரை செயல்பட வைக்கும் ! (மத் 15:8)**

வேத வசனங்களை போதிப்பதின் மூலம் உண்டாக்க வேண்டும். நினிவே மக்கள் போதிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து மாறினார்கள். **யோனா 3:4,5** "யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒரு நாள் பிரயாணம் பண்ணி; இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ் செய்யும்படி கூறினார்கள்; பெரியோர்கள் முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள்".

ஒருவரது சூழ்நிலைகளினாலோ (எல்லாவற்றையும் வணங்கிவிட்டேன் ஒன்றும் நடக்கவில்லை), மற்றும் அவரை சுற்றி நடப்பவைகளினாலோ (நான் வேண்டிக்கொண்டேன், அது நடந்துவிட்டது) விசுவாசம் ஏற்படுவதாக இருக்க கூடாது. மாறாக, அவர் கர்த்தருடைய வசனத்தை கேட்பதினால், வசனத்தை மையமாக கொண்டு ஏற்பட வேண்டும்.



**II தீமோ 3:16,17** "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது". வேத வாக்கியங்கள் எல்லாம் விசுவாசத்தினாலே நம்மை மாற்றும் படியாக, நம்மை தேறினவராகவும், எல்லாவித நற்கிரியையும் செய்ய தகுதியானவர்களாக பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டுள்ளது.

### முடிவுரை

பிரியமானவர்களே ! விசுவாசம் என்பது கர்த்தருடைய சரியாக புரிந்துக்கொண்டு, நேர்மையாக ஏற்றுக்கொள்ளப்படுவதினால் ஒருவருக்குள் உண்டானால் அவருடைய வாழ்வை தேவனுடைய ஆசீர்வாதத்தினால் நிறைந்ததாகவும், தேவனுக்கு உகந்ததாகவும் மாற்றிவிடக் கூடியது. ஆகையால் இவ்வளவு மேன்மையான விசுவாசம் நம்மை இரட்சிக்கும் விசுவாசமாக இருக்க வேண்டுமானால், நம் விசுவாசம் கீழ்படியும். விசுவாசமாக இருக்க வேண்டும் (யாக் 2)

**– அன்புடன், ஆசிரியர்**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Puthuyugam TV : Every Tuesday 6 :15 a.m.***

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Tamilan TV & Radio :** TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV:** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# பரிபூரண ஜீவன்

V. கிங்ஸ்லி ராஜா



"…. நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" **(யோ. 10:10)**

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, நமக்கு கொடுக்க விரும்பும் வாழ்வு (ஜீவன்) இப்படிப்பட்டதே ! ஆண்டவர் வாக்களித்துள்ள இந்த பரிபூரண ஜீவன், நேர்மறையான வாழ்க்கையாகும்; எதிர்மறையான எண்ணங்களுக்கோ செயல்களுக்கோ இதில் இடமில்லை. இவ்வாழ்விற்காக இயேசு கிறிஸ்து நமக்கு, அனுதினமும் வாழ்வதற்கான சில அடிப்படை சட்டங்களை கொடுத்துள்ளார்; மேலும் அதற்கென இலக்குகளையும் கொடுத்துள்ளார்.



இயேசுவின் வாக்கின்படி, இவ்வுலகில் நமக்கு பரிபூரண ஜீவனும் **(யோ 10:10),** இவ்வாழ்க்கைக்குப் பின் பரலோகமும் **(யோ. 14:1–3)** நம்முடைய இலக்காக இருக்க வேண்டும். மேலும் கடவுள், இந்த இரண்டு இலக்குகளையும் நாம் அடைவதற்கு தேவையான எல்லாவற்றையும் நமக்கு கொடுத்துள்ளார். "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி", **2 பேதுரு 1:3,** என்று வாசிக்கின்றோம். அப்படியென்றால், நமது ஆண்டவர் நமக்கு பரிபூரண ஜீவனையும், பரலோகத்தையும் வாக்களித்ததுமன்றி, அதற்கு தேவையான யாவற்றையும் கொடுத்தும் உள்ளார். மேலும் இவ்வாழ்விற்கான சட்டங்கள் வேத வசனங்களை உள்ளடக்கியதாக உள்ளது **(மத் 4:4: யோ 8:32: 12:48).**

அன்பு வாசகரே ! ஒரு பரிபூரண வாழ்வை கட்டுவது என்பது நோக்கத்தை (Purpose) அடிப்படையாகக் கொண்டதாகும். மேலும் அப்படிப்பட்ட வாழ்விற்காக நாம் தேவனுடைய பிள்ளைகளாக இவ்வுலகில் இருப்பதற்கான நோக்கங்கள் யாதெனில்…


- நாம் கடவுளுக்கு மகிழ்ச்சியையும், மகிமையையும் கொண்டுவர படைக்கப்பட்டுள்ளோம்

  " கர்த்தாவே, தேவரீர், மகிமையையும், கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்கிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்…"

- மேலும் நாம் கடவுளுக்கு சபையிலே மகிமையை கொண்டுவர வேண்டும்,

  "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்." **(எபே. 3:20)**

- இந்த பரிபூரண வாழ்விலே, நம்முடைய தினசரி குறிக்கோள் என்பது, தேவன் (கடவுள்) பரிசுத்தராக இருப்பது போல, நாமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டு வருகிறபடியால், இங்கே பரதேசிகளாய் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்" **(1 பேதுரு 1:16,17).**




**அவிசுவாசம், நாம் ஆசீர்வதிக்கப்படாதபடி தேவனுடைய கரங்களை கட்டி வைத்துவிடும்! (மத் 13:58)**

- ❖ ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என்ற கடனை தினசரி அடைப்பதற்காக வாழ்வதே, பரிபூரண ஜீவன் வாழ்பவரின் நோக்கமாக இருக்க வேண்டும் **(ரோம. 1:14–16).**

- ❖ மேலும் பிரதானமாக, கடவுளுடைய ராஜ்யத்தை வைப்பதே பரிபூரண ஜீவனை விரும்புவோரின் நோக்கமாக இருக்க வேண்டும்.

" முதலாவது தேவனுடைய ராஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்". **(மத் 6:33)**

- ❖ நாம் எல்லா மனிதருக்கும் நன்மை செய்வதையே நோக்கமாக கொண்டிருக்க வேண்டும். "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்ததக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்". **(கலா 6:10)**

- ❖ எல்லா சூழ்நிலைகளிலும் கிறிஸ்துவைப் போலவே சிந்திக்கவும், செயல்படவும் பார்த்தீர்களா! தாழ்மை, கீழ்படிதல் போன்ற நற்குணங்களே அவரது அடையாளம் கொண்டிருக்க வேண்டும் "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்". **(பிலி 2:5–8).**



மேலும், கிறிஸ்து என்னும் திரட்சை செடியின் கொடிகளாயிருக்கும் நாம் கனி தர வேண்டும். " நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது". **(யோ 15:5).**



மேலே நாம் வாசித்த இந்த நோக்கங்களுடன் மற்ற சிலவற்றையும் வேதாகமம் நம்முடைய பரிபூரண வாழ்விற்கு அத்தியாவசியமாக கூறுகின்றது. இவைகளை சரியாக செய்தால், பரிபூரண ஜீவனைக் கட்டுவதும், அதை மகிழ்ச்சியாக அனுபவிப்பதும் எளிமையானதே ! நாம் முழுமையான வாழ்க்கை வாழ வேண்டும் என தேவன் விரும்புகிறார். பிரியமானவர்களே ! நாம் உயிரோடு இருப்பது முக்கியமல்ல; மாறாக வாழ வேண்டும், அதுவும் பரிபூரணமாக வாழ வேண்டும்.

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. G பிரசன்னா பிளஸ்ஸி – வேப்பங்கனேரி
2. R. பர்னபாஸ் – கோவை
3. A. கெனித் சாம் – மதுரை
4. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை
5. D. டேப்னி – சென்னை
6. D. ஜீனித்தா – சென்னை





ஜெபத்தை பற்றிய தெளிவான மற்றும் ஆழமான 100 தியானச் செய்திகளைக் கொண்ட அருமையான புத்தகம்.
இப்புத்தகத்தை பெற...

**சகோ. இம்மானியேல்**

✆ **9841595730**


**கிறிஸ்துவினுடையவர்கள் காண்பதை விசுவாசிப்பவர்கள் அல்ல!**
**விசுவாசிப்பதை காணவும், பெற்றுக்கொள்ளவும் போகிறவர்கள் ! (2 கொரி 5:6–8)**

# தேவன் உலகத்தை படைத்தது ஏன்?

R. ஆண்டனி ராஜா



பிரியமான வாலிப சகோதரனே ! சகோதரியே ! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயராலே எனது அன்பின் வாழ்த்துக்கள். நாம் பார்த்து பிரமிக்கிற இந்த உலகத்தையும், அதன் அண்டசராசரங்களையும் சர்வ வல்ல தேவன் படைத்தார் **(அப் 17:24: ஆதி 1,2)** என்பது நாம் அறிந்ததே ! இந்த உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் தேவன் ஏன் படைத்தார்? நிச்சயமாக அதற்கான காரணங்களும், நோக்கமும் உண்டு. அது என்னவென்று தெரிந்துகொள்வது நமக்குள் விசுவாசத்தையும், தேவனுடைய வல்லமை பற்றிய அறிவையும் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.



## I. தேவன், உலகத்தை எப்படி படைத்தார்?

தேவன் இந்த உலகத்தை ஏன் படைத்தார் என்பதை அறிவதற்கு முன், அதை எப்படி படைத்தார் என்பதை அறிந்துகொள்வோம்.

### அ) தமது வார்த்தையினாலே

**சங் 33:6** "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது".

II **பேதுரு 3:5** "பூர்வ காலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்திலின்று தோன்றி ஜலத்தினாலே நிலைக்கொண்டிருக்கிற பூமியும் உண்டாயின வென்பதையும்..." தன் வாயிலிருந்து பிறந்த ஒவ்வொரு வார்த்தையினாலும் இவைகள் அனைத்தையும் தேவன் படைத்தார். அவர் "உண்டாகக்கடவது" என்று சொல்ல, இவைகள் அனைத்தும் உண்டாயின.

### ஆ) திட்டமிட்டு படைத்தார்

தேவன் இந்த உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் ஒழுங்கின்படி படைத்தார். முதல்நாள் வெளிச்சம்; இரண்டாம் நாள் ஆகாய விரிவு; மூன்றாம் நாள் செடி, கொடி, மரங்கள், நான்காம் நாள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்; ஐந்தாம் நாள் பறவைகள், நீரில் வாழும் ஜந்துக்கள்; ஆறாம் நாள் மிருகங்கள், ஊரும் பிராணிகள், மனிதர்கள் என திட்டமிட்டு வரிசையாக படைத்தார் (ஆதி 1)

**ஏசா 40:26** "உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத்திட்டமாக புறப்படப்பண்ணி, அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது".

### இ) மிகவும் நேர்த்தியாக படைத்தார்

**ஆதி 1:31** "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று".

I **தீமோ 4:4** "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது" **சங் 104:24** "கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது !



**விசுவாசம் என்பது இருதயத்திற்குள் மறைந்திருப்பது அல்ல, கிரியைகளினால் விளைந்திருப்பது ! (யாக் 2:18)**

அவைகளையெல்லாம் ஞானமாய் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது".

தேவனுடைய படைப்புகள் எல்லாம் மிகவும் நேர்த்தியாகவும், நல்லவைகளாகவும் இருந்தன. இதிலிருந்து உலகத்தை படைப்பதற்கான தேவனுடைய மெனக்கிடலை நாம் அறியமுடியும்.

## II. ஏன் படைத்தார்?

### அ) தம்மையும், தமது மகிமையையும் மனிதருக்கு அறிவிக்க...

**சங் 19:1** "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது".

**ரோமர் 1:19** "தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்".

தேவன், தாம் யார் என்பதையும், தம்முடைய மகிமை (வல்லமை, மகத்துவம்) என்ன என்பதையும் மனிதர்கள் அறிந்துகொள்ளும்படியாக, இந்த உலகத்தை படைத்தார்.

### ஆ) மனிதர்களின் பயன்பாட்டிற்காக ...

**ஆதி 1:28** "பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்து பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகலஜீ வஜந்துக்களையும்ஆ ண்டுகொள்ளுங்கள்எ ன்றுெ சால்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்".

**அப் 17:26** "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்".

மனிதர்களாகிய நாம் குடியிருந்து, இந்த பூமியில் உள்ள எல்லாவற்றையும் ஆண்டுக்கொள்ளும்படி, தேவன் நமக்காக இந்த உலகத்தைப் படைத்து, மனுகுலத்தை ஆசீர்வதித்தார்.



இந்த உலகமும், அதிலுள்ள யாவும் பரலோக தேவனாகிய கர்த்தரை அறிவிக்கின்றது மற்றும் மனிதன் வாழ தகுதியானதாக இருக்கிறது. பரலோக தேவன், தமது வார்தையினாலே, திட்டமிட்டு, மிகவும் நேர்த்தியாக இந்த உலகத்தை படைத்தது தம்மை வெளிப்படுத்தவும், மனிதன் வாழும்படியாகவும் தான். அது சரி, மனிதனை ஏன் படைத்தார்? பதில் அடுத்த இதழில்...

– இன்னும் சிந்திப்போம் ...!

## பொதுவான செய்திகள்

- 2 ஆண்டுகளாக உள்நாட்டு போர்: தெற்கு சூடானில் 40 ஆயிரம் பேர் பட்டினியால் தவிப்பு.
- இராணுவ ஆராய்ச்சியாளர்களை கொல்வதற்காகவே மும்பை தாக்குதல் திட்டமிடப்பட்டது: ஹெட்லி பரபரப்பு வாக்குமூலம்.
- சென்னையில் முதல் நாளில் மோட்டார் சைக்கிள் ஆம்புலன்ஸ் மூலம் 11 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.
- ஷிகா நோய் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பதற்காக 180 கோடி டாலர் அவசர நிதி ஒதுக்கீடு: ஒபாமா ஆலோசனை.
- தெற்கு ஆசியா விளையாட்டு போட்டியில் 53 தங்கம், 20 வெள்ளி, 6 வெண்கலம் பெற்று இந்தியா முதலிடம்.

# தொடர் 5 நாம் முற்றிலும் வெற்றி கொள்ளுகிறவர்கள்!

## We are more than conquerers !

"இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைகொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது" **(வெளி 1:3)**.

வசனம் 3ல், வெளிப்படுத்தின விசேஷத்தை வாசிக்கிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் அதன்படி செய்கிறவர்களுக்கும் கிடைக்கும் ஆசீர்வாதங்களை எழுதுகிறார். யூதருடைய ஜெப ஆலயங்களில் ஒருவர் எழுந்து நின்று சத்தமாக ஆகமங்களில் ஒரு பகுதியை வாசிப்பார். அதைக் கேட்பவர்கள் அவைகளை உள்வாங்கி, தங்கள் இருதயங்களில் பதித்து அவைகளை செயல்படுத்தும்படி எதிர்பார்த்து போதிக்கப்பட்டனர். அப்படிச் செய்வதால் கிடைக்கும் மிகுந்த பலனும் ஆசீர்வாதங்களும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. திருமறையில் அநேக இடங்களில் இந்தக் கருத்துக்கள் சொல்லப்படுவதைக் காணலாம். இப்படி கேட்டு அதன்படி செய்கிறவர்கள், மரியாளைக் காட்டிலும் மேலானவர்கள் அல்லது பாக்கியவான்கள் என்று கர்த்தர் போதித்தார் **(லூக்கா 11:27, 28)**

வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு "பாக்கியவான்" வசனங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவைகளில் வெளி 1:3ம் ஒன்றாகும். கர்த்தர் தமது மலைப் பிரசங்கத்தில் போதித்த ''பாக்கியவான்'' **(மத்தேயு 5:3-12)** வசனங்களுக்கு அப்பால் குறிப்பாகச் சொல்லப்பட்டவை இங்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ளன...

1. இத்தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள் **(வெளி 1:3)**

2. **வெளி 14:13**ல் கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்.

3. விழித்துக்கொண்டு தன் வஸ்த்திரத்தைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான் **(வெளி 16:15)**

4. ஆட்டுக்குட்டியின் கல்யாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் **(வெளி 19:9)**

5. தன் மீது மரணத்துக்கு அதிகாரமில்லாத மனுஷன் பாக்கியவான் **(வெளி 20:6)**

6. வசனங்களை ஞானமாய்க் கைகொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள் **(வெளி 22:7)**

7. தேவனுடைய வசனத்தின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் **(வெளி 22:14)**

யோவான் தாம் பெற்ற செய்திகளை எழுதி, ஆசியாவிலிருந்த ஏழு (உள்ளூர்) சபைகளுக்கும் கொடுத்தனுப்பும்படி தேவனால் பணிக்கப்பட்டார். அவர் எழுதி அனுப்பிய தேவனுடைய வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவனும் கைகொள்ளுகிறவனும் பாக்கியவான் என்று இதை வலியுறுத்துவதில் உள்ள நோக்கம் என்ன?

தன்னைச் சூழ்ந்து நிற்கிற ஆபத்தை உணருகிற எந்த மனுஷனும், தனக்குத் தேவையான ஆறுதலையும் சமாதானத்தையும், மேற்கொள்ளும் வழிகளையும் தேடுவான். உபத்திரவப்படவிருந்த கிறிஸ்தவர்களுக்கும், இந்த ஆறுதலும் சமாதானமும் மிக அதிகமாய்த் தேவைப்படக் கூடியதாயிருந்தது. இவைக் குறித்து தேவன் நேரடியாக பேசியிருந்தால் ரோம அரசு உஷாராகி, தங்களுடைய

**உயிருள்ள விசுவாசம் என்பது செயல்படுவதாக உள்ளது! செயல்படாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது ! (யாக் 2:20)**

உபத்திரவங்களைத் தீவிரமாக்கியிருக்கக்கூடும். எனவே மறை பொருளாகவும், தரிசனங்கள், எண்கள் மற்றும் உருவமாகவும் தேவன் வெளிப்படுத்தச் சித்தங் கொண்டார். பழைய ஏற்பாட்டு உதாரணங்கள் மூலம் அவர்களுக்கு வெளிப்படுத்தும் விதமும் இவைகளில் ஒன்று.

வாசிப்பதும், கேட்பதும், அவைகளை கைகொள்ளும்படி கோருவதும் பழைய ஏற்பாட்டிலும் தேவன் செயல்படுத்தியிருக்கிறார். எனவே, இது 'முதல் நூற்றாண்டு' கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே சொல்லப்பட்ட ஆலோசனையல்ல. மோசே இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்திக் கொண்டுபோன போது, அவர்களுக்குப் போதித்தும் சொன்னதாவது : "நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவி கொடுத்து, அவருடைய நியமங்களைக் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" என்று சொன்னார் **(யாத்திராகமம் 15:26)** மேலும், "நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு, நான் சொல்லுவதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயுமிருப்பேன்" என்றும் சொன்னார் **(யாத்திராகமம் 23:22).**


இங்கே வெளிப்படுத்தின விசேஷம் பேசும் சத்துரு அல்லது விரோதி 'ரோம' அரசு. கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் எழும்பி அவர்களை நசுக்கி அழிக்கையில், அவர்கள் ஆறுதலையும் ஊக்கத்தையும் பெற்று வெற்றி பெற ஏதுவாக, இந்த வசனங்களைக் கேட்டு, கைகொள்வதால் மட்டுமே சாத்தியமாகும் என்றார்.

இன்று 21-ம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களாகிய நமக்கு இப்படிப்பட்ட பாடுகள் இல்லாமலில்லை. நம்முடைய கிறிஸ்தவப் போராட்டத்தில் நாம் வெற்றி பெற விரும்புவோமாகில், நாமும் வசனங்களைக் கேட்டு, அவைகளை கைக் கொள்வது மிகவும் அவசியமாகும். தனித்தனியாக ஏழு சபைகளுக்கும் நிரூபங்களாக எழுதி முடிவுரையில், "கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக் கடவன்" என்று முடிந்தார். அதாவது வசனத்தை வாசிக்கவும், கேட்கவும், அவைகளைக் கைகொள்ளவும் மனமுள்ளவர்கள் யாரோ அவர்கள் அப்படிச் செய்யட்டும், என்று கூறுகிறார். "யாவரும் கேட்கிறதற்கு தீவிரமாயிருங்கள்" என்று யாக்கோபு எழுதுகிறார் **(யாக்கோபு 1:19).**

ஆம் ! நாமும் இவைகளின்படி செய்வோமாகில், பாக்கியவான்களாயிருப்போம். **(யாக்கோபு 1:22-25)** "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை (சாத்தானையும் அவனுக்குக் கீழ் ஆளுகை செய்த ரோம அரசையும்) ஜெயித்தார்கள் **(வெளி 12:11).** அப்படியானால் நாம் ஜெயிக்கமாட்டோமா என்ன?

(தொடரும்)

**இ.ஏ. ஆறுமுகம் (போதகர்)**
**திண்டுக்கல்**



# தொடர் 11 2 இராஜாக்கள் : ராஜ்யத்தின் கடைசி நாட்கள்

**வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்: 22–25**

## தலைப்பு:

1 மற்றும் 2 இராஜாக்கள் என்ற புத்தகங்கள் தொடக்கத்தில் ஒரே புத்தகமாக, 1 இராஜாக்கள் புத்தகத்தின் தொடக்க வார்த்தையைப் பின்பற்றிப் பெயரிடப்பட்டதாக இருந்தது (1 இராஜாக்கள் மீதான குறிப்புகளைக் காணவும்).

## பின்னணி

இந்தப் புத்தகம், 1 இராஜாக்கள் புத்தகத்தின் தொடர்ச்சியாக உள்ளது. இப்புத்தகத்தின் தொடக்கத்தில், ராஜ்யம் இன்னமும் பிரிந்ததாகவே உள்ளது. இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யம், கி.மு. 722ல் அசீரியாவினால் முற்றிலுமாக அழிக்கப்பட்ட வரையிலும் தொடர்ந்து சீர்கெட்டுப் போனது. வடக்கு ராஜ்யத்தில் மொத்தம் பத்தொன்பது அரசர்கள் ஆண்டனர்; அவர்கள் யாவருமே தீயவர்களாய் இருந்தனர்.




அசீரியர்கள் வடக்கு ராஜ்யத்தை அழித்த பின்பு, அவர்கள் யூதா என்ற தெற்கு ராஜ்யத்திற்குள் அணிவகுத்து வந்தனர். எசேக்கியா அரசர் மற்றும் ஏசாயா தீர்க்கதரிசி ஆகியோரின் முயற்சியால், தேவன் தெற்கு ராஜ்யத்தைக் காத்தார்; அது மேலும் 150 ஆண்டுகள் வரையில் நிலைத்திருந்தது. இருப்பினும், கடைசியில் தெற்கு ராஜ்யமும் விழுந்தது; அது கி.மு. 586ல் பாபிலோனியர்களால் பிடிக்கப்பட்டது. யூதாவும் மொத்தம் பத்தொன்பது அரசர்களைக் கொண்டிருந்தது. எசேக்கியா மற்றும் யோசியா ஆகியோரைப் போன்று சிலர் நல்லவர்களாய் இருந்தனர். பெரும்பான்மையானவர்கள் தேவனையும் விக்கிரகங்களையும் ஆராதித்தனர்.

அடிப்படையில் சரித்திரப் புத்தகங்களான 1 மற்றும் 2 இராஜாக்கள், மக்களைத் தேவனிடத்திற்குத் திரும்பும்படி அழைக்க முயற்சி செய்த தீர்க்கதரிசிகளின் கருத்துநோக்கில் எழுதப்பட்டன. அரசர்களின் பெரும்பான்மையான அரசியல் சாதனைகள், தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றிற்குப் பொருத்தமற்றவை என்ற வகையில் கண்டுகொள்ளப்படாதுள்ளன.

1 மற்றும் 2 இராஜாக்கள் என்ற புத்தகங்களை எரேமியா தீர்க்கதரிசி எழுதினார் என்று யூதத்துவ பாரம்பரியம் கூறுகிறது (1 இராஜாக்கள் பற்றிய குறிப்புகளில் காணவும்).

## வரைகுறிப்பு:

**I. பிரிந்த ராஜ்யம் தொடருகிறது.**

அ. இஸ்ரவேல் நாட்டில் அகசியாவினுடைய ஆளுகையின் தொடர்ச்சி மற்றும் யோராமின் ஆளுகை (1:1–8:15, 28, 29; 9:1–26, 30–37)

1. எலியா சுழற்காற்றில் எடுத்துக்கொள்ளப்படுதல்.

2. எலிசாவின் அற்புதங்களின் ஆரம்பம்.

ஆ. யூதாவில் யோராம் மற்றும் அகசியா ஆகியோரின் ஆளுகை (8:16–29; 9:17, 18, 27–29)

இ. இஸ்ரவேலில் ஏகூவின் ஆளுகை (10)

விசுவாசம் என்பது, எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி மற்றும் கண்ணுக்கு புலப்படாதவைகளை பற்றிய ஐயமற்ற நிலையாக இருக்கிறது.

ஈ. யூதாவில் அத்தாலியாளின் "ஆளுகை" மற்றும் யோவாசின் ஆளுகை (11,12)

உ. இஸ்ரவேலில் யோவகாஸ் மற்றும் யோவாஸ் ஆகியோரின் ஆளுகை (13:1–13: 14:8–16)

ஊ. யூதாவில் அமசியா மற்றும் உசியா (அல்லது அசரியா) ஆகியோரின் ஆளுகை (14:1–14, 17–22: 15:1–7)

எ. இஸ்ரவேலில் யெரொபெயாம், சகரியா, சல்லூம், மனாயீம், பெக்கக்சியா மற்றும் பெக்கா ஆகியோரின் ஆளுகை (14:23–29: 15:8–31: 16:5 முதல் காணவும்); யோனாவின் தீர்க்கதரிசனம் குறிப்பிடப்பட்டுள்ளது (14:25)

ஏ. யூதாவில் யோதாம் மற்றும் ஆகாஸ் ஆகியோரின் ஆளுகைகள் (15:32–38: 16)

1. இஸ்ரவேலில் ஓசியாவின் ஆளுகை

2. அசீரியர் சிறை பிடித்தல் (17).

II. யூதா ராஜ்யம் மாத்திரம்.

அ. எசேக்கியாவின் ஆளுகை (18–20): ஏசாயா (19:2 முதல்)

ஆ. மனாசேயின் ஆளுகை (21:1–18).

இ. ஆமோனின் ஆளுகை (21:19–26).

ஈ. யோசியாவின் ஆளுகை (22:1–23:30)

உ. யோவகாசின் ஆளுகை (23:31–34)

ஊ. யோயாக்கீமின் ஆளுகை (23:35–25:5)

எ. சிதேக்கியாவின் ஆளுகையும் எருசலேமின் அழிவும் (24:17–25:21): முடிவுரை (25:22–30).

## 2 இராஜாக்கள் புத்தகத்தில் இருந்து பாடங்கள்:

❖ ஒரு நபர் தம்மைத் தேவனுக்கென்று அர்ப்பணித்திருந்தால், அவரால் வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும். எலியாவையும் எலிசாவையும் கவனியுங்கள்.

❖ வாழ்வு நம்மை மூழ்கடிப்பதாக நாம் உணருகின்றபோது, தேவன் நமது ஆவிக்குரிய ஆதாரமூலங்களை நாம் காணும்படிக்கு நமது கண்களைத் திறக்கும்படி ஜெபித்தல் நமக்கு அவசியமாக இருக்கலாம் (6:16, 17).

எபேசியர் 3:20 தேவன் "நாம் வேண்டிக்கொள்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராய்" இருக்கின்றார் என்று சுட்டிக் காண்பிக்கிறது.

❖ தேவன் நம்மை அளவற்ற வகையில் ஆசீர்வதித்திருக்கின்றார். நாம் அமைதியாக இருந்து, நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளாமல் போவோமானால், அது எவ்வளவு பரிதாபத்திற்குரியதாக இருக்கும் (7:9: ரோமர் 1:14, 15)

❖ பூமியில் உள்ள ஒவ்வொரு நாட்டிற்கும், 2 இராஜாக்கள் புத்தகத்தில் செய்தியொன்றுள்ளது. ஒரு நாடு தேவனை விட்டு விலகிப் போகும்போது, அழிவு என்பது தவிர்க்க இயலாததாகிறது. சில வேளைகளில் அழிவு தாமதமாகலாம்; ஆனால் அது அப்போதும் தவிர்க்க இயலாததாகவே உள்ளது. தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார், மற்றும் அவர் பரியாசம் பண்ணெவாட்டார் (கலாத்தியர் 6:7).

மேசியாவை உலகத்திற்குக் கொண்டுவருதல் என்ற தேவனுடைய திட்டத்திற்கு இடையூறு செய்ய சாத்தான் தொடர்ந்து முயற்சி செய்தான். துன்மார்க்கமான அத்தாலியாள், தாவீதின் வம்சத்தை அழிக்க முயற்சி செய்தாள், ஆனால் தேவனுடைய திட்டங்கள் தடை செய்யப்பட முடியாதது (11:1–3)

**விசுவாசம் என்பது பக்தி சம்பந்தப்பட்டது: எனவே, பைபிள் மட்டுமே நமக்கு சரியாக வழிகாட்ட முடியும்.**

பாடம் 1

# ஆச்சர்யமான விசுவாசம்

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ் ! இயேசுவின் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும், விசுவாசம் வைத்திருந்த நூற்றுக்கதிபதியை பற்றி தெரிந்துகொள்வோமா?

ஆண்டவர் இயேசு இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில், ஒருமுறை கப்பர் நகூம் என்ற ஊருக்கு சென்றார். இதைக் கேள்விப்பட்ட அந்த ஊரிலிருந்த நூற்றுக்கதிபதி (நூறு படை வீரர்களுக்கு தலைவன்) ஒருவர் இயேசுவினிடத்தில் வந்து, 'ஆண்டவரே! என் வேலைக்காரன் ஒருவன் திமிர்வாத நோயினால் ரொம்ப கஷ்டப்படுகிறான்' என்று கூறினான்.



இயேசு அவனை பார்த்து : 'நான் உன் வீட்டிற்கு வந்து அவனை குணப்படுத்துவேன்' என்றார். அந்த நூற்றுக்கதிபதியோ, 'ஆண்டவரே! நீங்கள் என் வீட்டுக்கு வர நான் தகுதியானவன் கிடையாது. நீங்கள் ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால், என் வேலைக்காரன் குணமாகிவிடுவான்' என்று சொன்னார்.

ஆண்டவர் இயேசு, அந்த நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு தன்னை சுற்றி நின்ற மக்கள் கூட்டத்தை பார்த்து "இஸ்ரவேலருக்குள் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தை காணவில்லை" என்று அவனை பாராட்டினார்.

அது மட்டுமா? நூற்றுக்கதிபதியை பார்த்து; 'நீ போ, உன் விசுவாசத்தின்படி உன் வேலைக்காரன் சுகமாவான்' என்றார். என்ன ஆச்சரியம்! அந்த நொடியிலே நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் சுகமானான்.

பார்த்தீங்களா குட்டீஸ்! அந்த நூற்றுக்கதிபதி ஆண்டவர் இயேசுவின் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும் விசுவாசம் வைத்து, அந்த விசுவாசத்தினால் ஆண்டவரையே ஆச்சரியப்படுத்தினார். அதைப்போல நீங்களும் தினமும் ஆண்டவருடைய வார்த்தையை (பைபிளை) படித்து, விசுவாசமாக இருக்கும்போது, ஆண்டவர் உங்கள் குடும்பத்தில் உள்ள குறைவை நீக்கி, ஆசீர்வதிப்பார்.

**மனன வசனம் : மத்தேயு 4:4**

"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்".

உங்கள் அக்கா
- குயினி பிலேமோன்

---

பாடம் 2

# விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாம்

சிறுவர் பகுதி

ஹாய் செல்லங்களா! எப்படி இருக்கீங்க? உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள்.

குட்டீஸ், நாம் இந்த மாதம், பரலோக தேவன் மீது மிகுந்த விசுவாசம் கொண்டதினால், வாழ்வில் வெற்றி பெற்ற "விசுவாசத்தின் தந்தை" ஆபிரகாமைப் பற்றி படிப்போமா?

கல்தேயருடைய நாட்டிலே ஊர் என்கிற பட்டணத்திலே, ஆபிரகாம், தனது சொந்தம் மற்றும் பந்தங்களோடு வாழ்ந்து வந்தார். அவருடைய அப்பா பெயர் தேராகு; அவரது மனைவி பெயர் சாராள். ஆனால் அவர்களுக்கு குழந்தை இல்லை. அப்பொழுது ஒரு நாள் பரலோக தேவன், ஆபிரகாமை அழைத்து: 'நீ உன் நாட்டையும், வீட்டையும், உறவுகளையும் விட்டுவிட்டு, நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்கு போ; நான் உன்னை ஆசீர்வதித்து, உனக்கு குழந்தை பாக்கியம் தருவேன்' என்றார். அப்பொழுது ஆபிரகாமின் வயது 75.

ஆபிரகாம் தன் மனைவி சாராளையும், தன் சகோதரன் மகன் லோத்தையும் அழைத்துக்கொண்டு, தேவன்

காண்பித்த நாட்டிற்கு போனார். ஆபிரகாமிற்கு 100 வயதான போது, தேவன் குழந்தை பாக்கியத்தை கட்டளையிட்டார்; அவன் பெயர் ஈசாக்கு. ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கு மீது மிகவும் அன்புள்ளவராக இருந்தார்.



சில வருடங்கள் கழித்து, தேவன் ஆபிரகாமை அழைத்து, 'உன் மகன் ஈசாக்கை, நான் காண்பிக்கும் மலையில் எனக்காக பலியிடு' என்றார். நாம் என்ன செய்திருப்போம். அழுது, புலம்பி 'தேவனே ! எனக்கு இருப்பதோ ஒரு பிள்ளை. அவனை எப்படி பலி கொடுக்க முடியும்' என சொல்லியிருப்போம். ஆனால் ஆபிரகாம் என்ன சொன்னார் தெரியுமா? சரி, தேவனே! செய்கிறேன்' என சொல்லி, தன் மகனை பலிபீடத்தின் மேல் கிடத்தி, பலி கத்தியை ஓங்குகையில், தேவன் தடுத்து, அவன் விசுவாசத்தை பாராட்டினார்.

பார்த்தீங்களா குட்டீஸ் ! ஆபிரகாம் தேவன் மேல் உள்ள விசுவாசத்தினால், தேவன் சொன்னதை மறுப்பேதும் பேசாமல் செய்தார். நாமும் ஆபிரகாம் வழிபட்ட அதே பரலோக தேவனை வணங்குகிறபடியால், தேவன் நமக்கு சொன்னவைகளுக்கு, உடனே விசுவாசத்தோடு கீழ்படிவோம். ஆபிரகாமை ஆசீர்வதித்து பாதுகாத்த தேவன் நம்மையும் ஆசீர்வதித்து பாதுகாப்பார்.

**மனன வசனம்: எபி 11:6**

"விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்".

உங்கள் அக்கா
- பிரியா ஆண்டனி

---

பாடம் **3**

# அவிசுவாசம் கூடாது!

சிறுவர் பகுதி

கடவுளின் அன்புச் செல்வங்களா ! இந்த மாதம் அவிசுவாசத்தினால் (கடவுளை நம்பாததினால்) ஏற்படும் விளைவுகளை பற்றிக் கற்றுக் கொள்ளலாமா?



ஒருநாள் சாயங்காலத்திலே, இயேசு தன்னுடைய 12 சீடர்களோடு கடலில் பயணம் செய்தனர். அப்பொழுது ஆண்டவரோ, படகில் உறங்கிக் கொண்டிருந்தார். திடீரென கடலில் சுழல்காற்று உண்டாகி, பெரும்புயலாய் வந்தது. அலைகள் மிகவும் பயங்கரமாக படகில் மோதின; படகே நிரம்பத்தக்கதாக தண்ணீர் படகில் வந்தது. இன்னும் கொஞ்ச நேரந்தான் எல்லோரும் சாகப்போகறோம் என நினைத்த சீடர்கள், ஆண்டவரை எழுப்பி, 'போதகரே ! நாங்கள் சாகப் போகிறோம். உமக்கு எங்கள் மீது கவலையில்லையா'? என கேட்டனர்.

ஆண்டவர் என்ன செய்தார் தெரியுமா? அவர் எழுந்து, காற்றை அதட்டி, 'கடலே இரையாதே என்றார். என்ன ஒரு ஆச்சரியம் ! கடலும், காற்றும் உடனே அமைதியானது. சீடர்களை பார்த்து அவர்: 'அற்ப விசுவாசிகளே! ஏன் இப்படி பயப்படுகிறீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று' என்று கூறினார். சீஷர்கள் அனைவரும் காற்றும், கடலும்

ஆண்டவருக்கு கீழ்படிவதைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

பிள்ளைகளே! இந்த சீடர்கள் இயேசு கூட இருந்தும், அவர்மீது விசுவாசம் இல்லாமல் இருந்தார்கள். அதனால் கடலை, காற்றைப் பார்த்து பயந்தார்கள்; பதறினார்கள்; மரித்துப் போவோம் என கதறினார்கள். உங்களுக்கும் இயேசுவின் மேல் விசுவாசம் இல்லை என்றால், இந்த உலகத்தையும், நம்மை சுற்றி நடப்பதையும், உங்கள் எதிர்காலத்தை குறித்தும் பயமும், பதட்டமும் உண்டாகும். எனவே இயேசுவின் மேல் முழுமனதோடு விசுவாசம் வையுங்கள். அப்பொழுது அவிசுவாசமும், பிரச்சனையும் ஓடிப்போகும். அமைதலும் சமாதானமும் உண்டாகும். இயேசுவின் மீது விசுவாசமாக இருப்பீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனன வசனம் : மாற்கு 9:24**

"விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும்".

உங்கள் அண்ணன்
**– அன்பு ஏசுதாஸ்**

---

பாடம் **4**

# விசுவாசமுள்ள எலியா

சிறுவர் பகுதி

அன்பு கண்மனிகளா ! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள். நாம் இந்த மாதம் "எலியா" என்ற தீர்க்கதரிசியைப் பற்றி தெரிஞ்சுக்கொள்வோமா?

ஆகாப் என்ற ராஜா இஸ்ரவேல் நாட்டை ஆட்சி செய்த காலத்தில், எலியா என்ற தேவனுடைய தீர்க்கதரிசி தேவனிடத்தில் மிகவும் விசுவாசம் உள்ளவராய் வாழ்ந்து வந்தார். ஆகாப் ராஜா இஸ்ரவேல் மக்களை தேவனை வணங்குவதை விட்டு விட்டு சிலைகளை வழிபட செய்தான். இதனால் எலியா தேவனிடம் மழை பெய்ய வேண்டாம் என்று கருத்தாக விசுவாசத்துடன் ஜெபம் செய்தார். அதினால், மூன்று ஆண்டுகள் 6 மாதம் வரை இஸ்ரவேல் நாடெங்கும் மழை பெய்யவில்லை. இதனால் மிகவும் பஞ்சம் உண்டானது.



எலியா ஜனங்கள் அனைவரிடமும், 'நீங்கள் நம்மை படைத்த உயிருள்ள தேவனை விட்டுவிட்டு, சிலைகளை வழிபடுகிறீர்கள், இது பாவம்', என்று கூறி, மேலும் கர்த்தர் தான் தெய்வம் என்பதை அற்புதவிதமாக பலி செலுத்தி நிரூபித்தான். ஜனங்கள் அனைவரும் சிலையை விட்டுவிட்டு கர்த்தரே தெய்வம் என முகங்குப்புற விழுந்து வணங்கினார்கள். மீண்டும் எலியா தேவனை நோக்கி, விசுவாசத்தோடு மழை வேண்டி ஜெபம் செய்தார். மழை பெய்தது. நாட்டின் பஞ்சம் நீங்கியது.

செல்லங்களா ! எலியா தேவனிடத்தில் விசுவாசமாக இருந்தார். அவர் விசுவாசத்தோடு ஜெபித்தபோது மழை பெய்யவில்லை; மீண்டும் ஜெபித்தார், மழை பெய்தது. நாமும் தேவனிடத்தில் விசுவாசத்தோடு ஜெபிக்கும்பொழுது, தேவன் நமக்கும் உதவி செய்வார். எந்த சூழ்நிலையிலும் தேவனை விசுவாசத்தோடு பிடித்துக்கொள்வோம். தேவன் நம்மை உயர்த்துவார்.

**மனன வசனம் : மத்தேயு 21:22**

"நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்".

**– ஏஞ்சலின் கமலம்**

## பெரியவர்களுக்கான கேள்விகள்

1. நம்பப்படுகிறவைகளின் உறுதி, காணப்படாதவைகளின் நிச்சயம் எது?
2. அவிசுவாசிகள் எதில் பங்கடைவார்கள்?
3. "விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்" என வாசிப்பதெங்கே?
4. எதை விசுவாசிக்கிறவன் பதறான் என்று ஏசாயா கூறுகிறார்?
5. "விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடி" வசனத்தை எடுத்துப்போகிறவன் யார்?
6. எப்படிப்பட்ட விசுவாசம் செத்ததாயிருக்கிறது என்று யாக்கோபு கூறுகிறார்?
7. 'என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்' என வேண்டியவன் யார்?
8. யாருடைய கழுத்தில் எந்திரக்கல்லை கட்டி சமுத்திரத்தின் ஆழத்திலே அமிழ்த்துவது நலமாயிருக்கும்?
9. 'எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண வேண்டும்' என்று யார் யாரிடம் வேண்டியது?
10. 'உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்' யார், யாரிடம் சொன்னது?

## சிறுவர்க்கான கேள்விகள்

1. 'விசுவாசத்தின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?
2. ஈசாக்கை பெற்றபோது ஆபிரகாமுக்கு வயதென்ன?
3. காற்றையும், புயலையும் கண்டு சீஷர்கள் என்ன செய்தனர்?
4. இயேசு, சீடர்களை ஏன் கடிந்துக்கொண்டார்?
5. நூற்றுக்கதிபதி, தன் வேலைக்காரனை குணமாக்க எது மாத்திரம் போதும் என்றார்?
6. எலியா ஜெபித்தபோது எவ்வளவு காலம் மழை பெய்யவில்லை?
7. எபி 11:6ன் படி தேவனுடைய பிரியத்தை பெற, நீ என்ன செய்யப் போகிறாய்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-03-2016**

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. **பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

### ஜனவரி மாத பதில்கள்

1. ரோமர் 8 : 26
2. லூக்கா 18 : 13
3. நீதி 28 : 9
4. I தெச 5 : 17
5. I பேதுரு 3 : 12, சங் 34 : 15
6. யாத் 3 : 7
7. மத் 21: 22
8. வெளி 3 : 19
9. அப் 17 : 25
10. பேதுரு 2 : 2

### ஜனவரி மாத பதில் எழுதியவர்கள்

1. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
2. Mrs. R. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
3. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
4. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
5. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
6. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
7. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
8. Mrs. ஹெலன் திலக் – மதுரை
9. R. சரோஜா – தென்கலம்
10. J. ஜோசப்– கோவில்பட்டி
11. M. லாரன்ஸ் கோபி – வேப்பங்கனேரி
12. B. ஜாய்ஸ் ஜோசுவா – தூத்துக்குடி
13. Mrs. சரிதா– வேப்பங்கனேரி
14. Mrs. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
15. Mrs. J. மேரிசாராள்– சமயநல்லூர்
16. Mrs. காந்தா மனோகரன்– திருச்சி
17. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
18. R. நாகலிங்கம் சித்ரா – திருச்சி
19. Mrs. ஹெப்சி தாமஸ் – படப்பை
20. K. மோகன் – கொமாராபாளையம்
21. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
22. S. ஜெயராஜ் – பொள்ளாச்சி
23. Mrs. குளோரி பால்ராஜ் – தஞ்சை
24. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
25. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
26. C. பூபதி லாரன்ஸ் – ஆவரம்பாளையம்
27. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
28. S. சுதந்திரமணி – திருப்பத்தூர்
29. Mrs. தேவி ராஜசிங் – திருப்பூர்
30. Mrs.K. சந்திரா பீட்டர் – திருச்சி
31. P. இந்திராபாண்டி – திருமங்கலம்
32. M. ஈஸ்வரி – கரூர்
33. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
34. M. ஆலிவர் – குஜராத்
35. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
36. Mrs. மேரிராஜ் – மதுரை
37. A. ரோஸ் மேரி – சென்னை
38. Mrs. ஷீலா ரிச்சர்ட்தாஸ் – கொளத்தூர்
39. R. மரிய ஜோசப் – முடிச்சூர்
40. Mrs. S. செல்வி ஜான்ரோஸ் – நாகர்கோவில்
41. I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
42. Mrs. பியுலா ஜேசுராஜன் – புதுச்சேரி
43. Mrs. S. விஜய் சந்திரா – கோவை
44. J. செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
45. Y. ஜெயசுதா தேவசகாயம் – சென்னை
46. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
47. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
48. P. வசந்த் – குன்னூர்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# வாலிபர் வேதாகம முகாம் – 2016 (மதுரை)



வாலிபர்களுக்கு வேதாகம ஆலோசனை வழங்கிய ஆசிரியர்...




பைபிள் பாடங்களை படித்து முடிக்கும் வாலிபர்கள் வேதாகமத்தை பரிசாக பெறுகின்றனர்.



பங்குபெற்ற வாலிபர்கள் மற்றும் வேதாகம ஆலோசனை வழங்கும் சகோ.ஆண்டனி ராஜா...




வேத அறிவு போட்டியில் வெற்றி பெற்ற வாலிபர்களுக்கு பரிசுகள் வழங்குதல்

# பார்வையற்றோருக்கான வேதாகம முகாம் – 2016 (சென்னை)





சென்னை சந்தோஷபுரத்தில் நடைபெற்ற பார்வையற்றோருக்கான வேதாகம முகாமில் செய்தியளித்த நமது ஆசிரியர்








பார்வையற்றோர் முகாமில் உணவு வேளையின் போது...




மதுரை திருவாதவூர் கிறிஸ்துவின் சபையில் இம்மாதம் திருமுழுக்கு பெற்ற வாலிப சகோதரன்

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th February 2016




## தபால் வழி பைபிள் பாடங்கள்







அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்














அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**


If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us facebook NT Gospel Restorers